**செய்தி வெளியீடு எண்: 611** **நாள்:19.09.2019**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான உயர் நிலைக்குழு இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக 28.08.2019 முதல் 09.09.2019 வரை பயணம் மேற்கொண்டது. அந்நாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் முதலீட்டாளர்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இப்பயணத்தின் போது ரூ.8,835 கோடியளவிலான முதலீடுகள் செய்து 35,520 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய வகையில் 41 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. அம்முதலீடுகளை உறுதி செய்யும் பொருட்டு முதலீட்டு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அனுமதிகள் வழங்குதலை துரிதப்படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான உயர் நிலை அதிகாரக் குழு (High Powered Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் மாண்புமிகு துணை முதலமைச்சர், மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வை, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கம், தொழில், சுற்றுச்சூழல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (ம) தகவல் தொழில்நுட்ப துறைகளின் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் உறுப்பினர்கள் ஆவர். தொழில் துறை முதன்மைச் செயலாளர் இக்குழுவில் உறுப்பினர் செயலாளராக செயல்படுவார்.

முதலீடுகளுக்கான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஒற்றைச் சாளர முறையில் பெறப்பட்டு நிலுவையில் உள்ள அனுமதிகள் மற்றும் மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு குழுமத்தால் வழங்கப்படும் சுற்றுச்சூழல் அனுமதி போன்ற பிற அனுமதிகளை துரிதப்படுத்துவதற்காக பிரதி மாதம் முதல் வாரத்தில் இக்குழு கூடும்.

தமிழ்நாடு வணிக எளிமையாக்கல் விதிகளில் (Tamil Nadu Business Facilitation Rules) வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்கு மேல் நிலுவையில் உள்ள அனுமதிகள், அல்லது மாநில சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு குழுமம் (SEIAA) போன்ற அமைப்புகளில் ஒரு மாதத்திற்கு மேலாக நிலுவையில் உள்ள அனுமதிகளுக்கு இக்குழு தீர்வு காணும்.

மேலும், பெரும் முதலீட்டாளர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்காக வும், தொழில் முதலீடுகளை துரிதப்படுத்துவதற்காகவும் இந்திய ஆட்சி பணி அலுவலர் நிலையில் ஒரு அலுவலரை சிறப்புப் பணி அலுவலராகக் (OSD) கொண்டு "முதலீடுகளை எளிதாக்கும் பிரிவு (Investment Facilitation Cell)" ஒன்று முதலமைச்சர் அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**